# பிப்ரவரி 6 நடப்பு நிகழ்வுகள்

## 2018

*(TNPSC, SSC, BANK, UPSC, RAILWAY)*

Visit Us - https:// tamil.examsdaily.in

Face book - ExamsDaily Tamil

**தமிழகம்**

**சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லை விரிவாக்கம் அரசாணை வெளியீடு**

- சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லை 8 ஆயிரத்து 878 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு விரிவாக்கம் செய்யப்படுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது.

**இந்திய அளவில் 2-வது இடம்: தமிழகத்தில் சரக்கு-சேவை வரி ரூ.19 ஆயிரத்து 592 கோடி வசூல்**

- மத்திய அரசு 'ஒரே தேசம், ஒரே வரி' என்ற அடிப்படையில் நாடு முழுவதும் ஜி.எஸ்.டி. எனப்படும் சரக்கு-சேவை வரியை கடந்த ஆண்டு ஜூலை மாதம் 1-ந்தேதி அமல்படுத்தியது.
- இந்த வரி வருவாயில் 50 சதவீதம் மத்திய அரசுக்கும், 50 சதவீதம் மாநில அரசுக்கும் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.
- இந்தநிலையில் ஜி.எஸ்.டி. மூலம் கடந்த டிசம்பர் மாதம் வரையிலான 6 மாத காலத்தில் மத்திய அரசுக்கு ரூ.9.8 லட்சம் கோடி கிடைத்துள்ளது. 34 லட்சம் தொழில் முனைவோர்கள் புதிதாக இணைந்துள்ளனர். ஜி.எஸ்.டி. அதிகம் வசூலான மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாட்டுக்கு 2-வது இடம் கிடைத்தது.

**உண்மைத் தன்மையை வாடிக்கையாளர்கள் அறிய எஃப்எஸ்எஸ்ஏஐ நடவடிக்கை:**

- ஆர்கானிக் உணவுப் பொருட்களின் தரத்தை உறுதிசெய்ய அவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு புதிய விதிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இந்த விதிமுறைகள் வரும் ஜூலை 1-ம் தேதி முதல் அமலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ் வழி கல்வி பயிலும் மாணவர்களுக்கு காமராஜர் பிறந்த நாளில் ஊக்கத்தொகை:**

- தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, காமராஜர் பிறந்த நாளில் ஊக்கத்தொகை வழங்கப்படும் என தமிழக பள் ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

**நாடு முழுவதும் இந்த ஆண்டு முதல் எம்பிபிஎஸ், பிடிஎஸ், ஆயுஷ் படிப்புகளுக்கு ஒரே நீட் தேர்வு: மத்திய இடைநிலை கல்வி வாரியம் நடத்துகிறது**

- நாடு முழுவதும் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளுக்கு தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET - நீட்) நடத்தப்படுகிறது. அந்த தேர்வில் தகுதிப் பெறும் மாணவர்களைக் கொண்டு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் உள்ள எம்பிபிஎஸ், பிடிஎஸ் இடங்கள் நிரப்பப்படுகின்றன.

**மாநகர போக்குவரத்துக் கழகத்தில் ஒரு நாள் பயணத்துக்கு பயன்படும் பாஸ் கட்டணம் ரூ.80 ஆக உயர்வு:**

- மாநகர போக்குவரத்துக் கழகத்தில் அளிக்கப்பட்டு வரும் ஒரு நாள் பயண பாஸ் கட்டணம் ரூ.50-ல் இருந்து ரூ.80 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, வரும் 8-ம் தேதி முதல் அமலுக்கு வரும் என தகவல் வெளியாகியுள்ளன.

**ஹார்வார்டு பல்கலைக்கழக தமிழ் இருக்கை அமைய ரூ. 1.கோடி நிதி: ஸ்டாலின் அறிவிப்பு**

- உலகப் புகழ் பெற்ற ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் “தமிழ் இருக்கை” அமைவதற்கு திமுகவின் பங்களிப்பாக ரூ. 1 கோடி அளிக்கப்படுவதாக மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**<u>இந்தியா</u>**

**கர்நாடக மாநிலத்திற்கு தனி மூவர்ண கொடி; 9 பேர் கொண்ட குழு பரிந்துரை**

- கர்நாடகாவில் சித்தராமையா தலைமையிலான அரசு மாநிலத்திற்கு என தனியாக ஒரு கொடியை வடிவமைப்பதற்காக 9 பேர் கொண்ட குழு ஒன்றை உருவாக்கியது. அந்த குழு அதற்கான பரிந்துரை கொண்ட அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

**தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு மத்திய பட்ஜெட்டில் ரூ.2,548 கோடி ஒதுக்கீடு**

- தமிழக ரெயில்வே திட்டங்களுக்கு ரூ.2 ஆயிரத்து 548 கோடி மத்திய பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் விற்பனை: தேர்தல் ஆணையத்தின் உத்தரவால் குழப்பம்**

- கடந்த ஆண்டு மே 26-ம் தேதி இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: தொழில்நுட்ப நிபுணர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை யாருக்கும் விற்பனை செய்யக் கூடாது.
- அதே நேரத்தில் அனைவருக்குமான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் என்று வரையறுக்கப்பட்டிருக்கும் இவிஎம்-களை விற்பனை செய்யலாம். இந்த வகை இவிஎம்-களை மாநில தேர்தல் ஆணையங்களுக்கும், வெளிநாட்டிலுள்ள தேர்தல் அமைப்புகளுக்கும், இதர நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யலாம் என அந்த சுற்றறிக்கை தெரிவித்துள்ளது.

**<u>உலகம்</u>**

**உலகின் பரபரப்பான விமான நிலையம்: துபை முதலிடம்**

- கடந்த 2017-ஆம் ஆண்டுக்கான உலகின் மிகவும் பரப்பரப்பான விமான நிலையங்கள் பட்டியலில் துபை விமான நிலையம் முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

## வணிகம்

### சர்க்கரை இறக்குமதிக்கு 100% வரி விதிக்க மத்திய உணவு அமைச்சகம் பரிந்துரை

- கரும்பு விவசாயிகளின் நலன் கருதி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரைக்கு 100% வரி விதிக்க மத்திய உணவு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளதாக தெரிகிறது.

### அரசு - உச்ச நீதிமன்றம் மோதல்: மாலத்தீவில் அவசர நிலை பிரகடனம்- இந்தியா உதவ நீதிபதிகள் கோரிக்கை

- அரசு நிர்வாகத்தில் உச்ச நீதிமன்றம் தலையிடுவதாக கூறி மாலத்தீவில் அவசர நிலை பிரகடனத்தை அதிபர் அப்துல்லா யாமீன் நேற்றிரவு அறிவித்தார். அதேபோல் அரசியல் குழப்பத்துக்குத் தீர்வு காண, இந்தியா உதவ வேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## விளையாட்டு

### உலக ஜூனியர் டேபிள் டென்னிஸ்: மானவ் தக்காருக்கு வெள்ளி

- லக்ஸம்பர்க்கில் நடைபெற்ற ஐடிடிஎஃப் உலக ஜூனியர் சர்கியூட் ஃபைனல்ஸ் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய வீரர் மானவ் தக்கார் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

---***---